**கிண்ணியா பிரதேச சபை**

**திருகோணமலை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 செப்தெம்பர் 25 ஆந் திகதி கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 20 ஆந் திகதி கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 டிசெம்பர் 23 ஆந் திகதி சபைத் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, கிண்ணியா பிரதேச சபை 2012 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கிண்ணியா பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

சபையானது 2012 ஆம் ஆண்டில் வருமான சேவையை வழங்குவதற்கும் ரூபா 6,690,350 தொகையான நிலையான சொத்துக்களை பயன்படுத்தி இருந்தபோதும் அவற்றிற்கான பெறுமானத் தேய்வு கணக்குகளுக்கு கொண்டுவரப்படாமையால் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட இலாபம் சபையினது உண்மையான இலாபத்தினை வெளிப்படுத்தியிருக்கவில்லை.

### 1.3.2 **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வருமானப் பேரேட்டின்படி சபையின் மீளாய்வாண்டிற்கான மொத்த வருமானம் ரூபா 14,658,899 ஆக இருந்த போதிலும் இது கணக்குகளில் ரூபா. 14,418,464 ஆகக் காட்டப்பட்டிருந்ததனால் மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 240,435 வினால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக சபையினால் பெறவேண்டிய ரூபா. 738,325 தொகையான வருமானம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கான ரூபா 17,615 தொகையான கணக்காய்வுக் கட்டணத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 316,768 தொகையான மீண்டுவரும் செலவு மூலதனச் செலவு கணக்கில் பதியப்பட்டுள்ளது.

(உ) மீளாய்வாண்டில் உத்தியோகத்தர்களுக்கு முற்பணமாக வழங்கப்பட்ட ரூபா 60,000 தொகை அறவீடு செய்யப்படாததுடன் இறுதிக்கணக்கிற்கும் கொண்டுவரப்படவில்லை.

### 1.3.3 **பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2006 ஆம் ஆண்டு வரை சபையினால் அறவீடு செய்யப்பட்ட ரூபா 2,315,384 தொகையான ஊழியர்களின் ஓய்வூதியப் பங்களிப்பு ஓய்வூதிய திணைக்களத்திற்கு அனுப்பப்படாமல் வைத்திருக்கப்பட்டது.

(ஆ) 2006 ஆம் ஆண்டு கிண்ணியா நகர சபைக்கு கொடுக்க வேண்டிய ரூபா 1,983,482 தொகையைத் தீர்த்து வைப்பதற்கும் பெறவேண்டிய ரூபா 897,795 தொகையை அறவீடு செய்வதற்கும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) ரூபா 27,806 தொகையான சில்லறைக் கடன் கொடுத்தோர் 2006 ஆம் ஆண்டிலிருந்து தீர்க்கப்படாமல் உள்ளது.

(ஈ) 2006 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை நிலுவையாகவுள்ள ரூபா 4,438,197 தொகையான அரசிறையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

1.3.4 **<u>கணக்காய்விற்கான சான்றின்மை</u>**

பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் இன்மையால் அவ்விடயங்களை கணக்காய்வில் திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது.

| விடயம் | பெறுமதி ரூபா | சான்று |
|---|---|---|
| காணி கட்டிடம் | 1,441,310 | நிலையான சொத்துப் பதிவேடு, மெய்மையாய்வுச் சபை அறிக்கை |
| பொறி இயந்திரம் | 1,308,575 | |
| மோட்டார் வாகனம் | 3,029,710 | |
| அரசிறை நிலுவை | 5,335,992 | விபரமானபட்டியல், காலப்பகுப்பாய்வு |
| கேள்வி வைப்பு | 1,120,220 | |
| குத்தகை வைப்பு | 281,250 | |
| நானாவித வைப்பு | 573,306 | |
| முற்கொடுப்பனவு | 173,544 | பதிவேடு, காலப்பகுப்பாய்வு |

1.3.5 **<u>சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை</u>**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) **<u>1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம்</u>** | |
| (i) பகுதி II பிரிவு 19 (1) (ை) | உள்;ராட்சி ஆணையாளரின் முன் அங்கீகாரமின்றி பத்து தற்காலிக ஊழியர்கள் நியமிக்கப்பட்டு 2012 ஆம் ஆண்டில் சபை நிதியில் இருந்து ரூபா 387,889 சம்பளமாக வழங்கப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| (ii) பகுதி II பிரிவு 158 | சபையின் செயற்பாட்டு எல்லைக்குட்பட்ட சகல வட்டாரங்களிலிருந்தும் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் ஆதனவரி அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) **<u>பிரதேச சபை நிதி நிர்வாக ஒழுங்கு விதி 1989</u>**

| | |
|---|---|
| (i) அத்தியாயம் VII பிரிவு 164 | செயலாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஓர் உத்தியோகத்தர் கணக்கீட்டு ஆவணங்களை நாள்தோறும் செவ்வை பார்த்து அவற்றில் முதலெழுத்து ஒப்பமிடவில்லை. |
| (ii) அத்தியாயம் IX நானாவிதம் 181 - 184 | காசு மற்றும் களஞ்சியப் பொருட்கள் நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்பு பெற்றுக்கொள்ளப்படவில்லை. |

(இ) **<u>மாகாண நிதி ஒழுங்கு விதி</u>**

| | |
|---|---|
| (i) இலக்கம் 237 | 2012 டிசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஆறு மாதங்களுக்கு மேல் மாற்றப்படாத ரூபா 1,354,044 தொகையான 151 காசோலைகள் தொடர்பாக சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |
| (ii) இலக்கம் 433 | மீளாய்வாண்டில் சபையின் வாகனங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் செலவு ரூபா 821,147 திருத்தச் செலவு ரூபா 693,833 என்பன வாகன மாதாந்த பொழிப்பு கூற்றில் பதியப்பட்டிருக்கவில்லை. |

## 2. <u>நிதிசார், செயற்பாட்டு மீளாய்வு</u>

### 2.1 <u>நிதிசார் விளைவுகள்</u>

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2012 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்திலும் கூடிய மீண்டுவருஞ் செலவினம் ரூபா 399,527 இதற்கு எதிரான முந்திய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 10,667,880 ஆகும்.

3. **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு விடயங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீடு

(இ) நிலையான சொத்துக்கள்

(ஈ) வரி சேகரிப்பு